# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2052 • நவம்பர் 27, 2021 | Weekly E-paper • November 27, 2021


# காலம் இல்லை காரணமும் சொல்வதில்லை!

சுப.வீரபாண்டியன்





## மீனவர் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும்

மா.உதயகுமார்

## வெள்ளப் பாதிப்பும், உரிமையும்

தலையங்கம்

## கூட்டாட்சிக் கட்டமைப்பைச் சீர்குலைக்கும் பா.ஜ.க

சாரதாதேவி

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ●திருவள்ளுவர் ஆண்டு 2052 ● நவம்பர் 27, 2021 Weekly E-paper ● November 27, 2021


# காலம் இல்லை காரணமும் சொல்வதில்லை!

**சுப.வீரபாண்டியன்**

அடடா அருமை அவைத்தலைவர் அவர்களே! வெளிப்படுத்த வேண்டிய செய்தியை, வெளிப்படுத்த வேண்டிய இடத்தில், வெளிப்படுத்த வேண்டிய முறையில் வெளிப்படுத்தியுள்ளீர்கள்!

அண்மையில் சிம்லாவில் நடைபெற்ற அனைத்திந்திய அவைத்தலைவர்கள் மாநாட்டில், தமிழ்நாடு சட்டமன்ற அவைத்தலைவர் அப்பாவு அவர்கள் ஆற்றியுள்ள உரை, இன்றைய காலத்தின் தேவையாக உள்ளது. தமிழ்நாட்டின் சார்பில் அவர் பேசியுள்ள போதிலும், ஒவ்வொரு மாநிலத்தின் தேவையையும் அது எதிரொலித்துள்ளது!

அப்பாவு அவர்கள் தன் உரையில் இரண்டு முதன்மையான கோரிக்கைகளை முன்வைத்துள்ளார். இரண்டுமே மிக மிக நியாயமானவை. ஜனநாயகத்தின் மனசாட்சியைத் தட்டி எழுப்பக் கூடியவை!



அப்பாவு

தமிழ்நாடு மக்களின் எண்ணங்களை எடுத்துச் சொல்லக்கூடிய அவைதான் சட்டமன்றம். எனினும் அந்த அவையில் ஒரு மனதாகவோ, பெரும்பான்மை அடிப்படையிலோ நிறைவேற்றப்படும் தீர்மானங்கள் உடனடியாகச் சட்டம் ஆகிவிடுவதில்லை. குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெற்றபின்பே அவை சட்டங்களாகும். குடியரசுத் தலைவருக்கு ஒவ்வொரு தீர்மானமும் அந்தந்த மாநில ஆளுநர் வழியாகவே அனுப்பப்படும்.

அந்தத் தீர்மானங்களை ஆளுநர் குடியரசுத் தலைவருக்கு அனுப்பலாம், அல்லது திருத்தம் கோரித் திருப்பி அனுப்பலாம். ஆனால் இங்கே என்ன நடக்கிறது என்றால், பல தீர்மானங்கள் “கருந்துளை”யில் சிக்கிக் கொள்ளும் பொருள்கள் ஆகிவிடுகின்றன. எந்த விடையும் ஆளுநரிடம் வருவதில்லை. அந்தத் தீர்மானங்கள் என்ன ஆயின என்றே யாருக்கும் தெரியாது.

இதனைச் சுட்டிக்காட்டிப் பேசிய தமிழ்நாடு சட்டமன்ற அவைத்தலைவர், நாம் அனைவரும் ஒருங்கிணைந்து, குறிப்பிட்ட காலத்திற்குள் ஆளுநர் அவற்றின் மீது நடவடிக்கை எடுத்திட வலியுறுத்த வேண்டும் (*“We have to work together to set a binding time frame within which Bills have to be assented to, returned or reserved for the consideration of the Hon’ble President of India by the Hon’ble Governors)* என்று தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார்.



அடுத்ததாக குடியரசுத் தலைவர் குறித்தும் ஒரு வினாவை எழுப்பியுள்ளார். சில நேரங்களில் ஆளுநர் தில்லிக்கு அனுப்பிவைத்தப் பிறகும், குடியரசுத் தலைவர் உடனே நடவடிக்கை எடுப்பதில்லை. ஒருவேளை, குடியரசுத் தலைவர் அதனை ஏற்கவில்லை என்றால், எந்தக் காரணமும் கூறாமல் திருப்பி அனுப்பி விடுகிறார்.

குடியரசுத்தலைவருக்கு உள்ள அதிகாரத்தில் நம் அவைத்தலைவர் தலையிடவில்லை. ஆனால் மிக நியாயமான, பொட்டில் அறைந்தாற்போன்ற ஒரு வினாவை அங்கு முன்வைத்திருக்கிறார். காரணத்தைச் சொன்னால்தானே, திருத்தங்கள் தேவைப்பட்டாலும் அவற்றைச் செய்து மீண்டும் அனுப்ப முடியும்! காரணம் தெரிந்துகொள்ளும் தகுதி கூட, ஒரு மாநிலத்தின் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், வாக்களித்த மக்களுக்கும் இல்லையா? ( *“Therefore, are not the people entitled to know atleast the reason for which the Bill was not assented to?* “) என்று கேட்டுள்ளார்.

காரணமே சொல்லாமல் ஒரு தீர்மானத்தைத் திருப்பி அனுப்புவது, அந்தத் தீர்மானத்தையோ, அந்த மாநிலத்தில் உள்ள ஆளும் கட்சியையோ, சட்டமன்றத்தையோ அவமதிப்பது மட்டும் இல்லை. வாக்களித்த மக்களை ஒட்டுமொத்தமாக அவமதிப்பது என்பதை அப்பாவு அவர்கள் எடுத்துக்காட்டியுள்ளார்.

தீர்மானத்தைக் குடியரசுத் தலைவருக்கு அனுப்புவதற்கு ஆளுநருக்குக் காலக் கெடு எதுவுமில்லை, திருப்பி அனுப்பப்படுவதற்கான காரணத்தைக் குடியரசுத் தலைவர் சொல்ல வேண்டியதுமில்லை என்றால், இதற்குப் பெயர் ஜனநாயகமா?

தமிழ்நாடு எழுப்பியுள்ள இந்தக் கேள்வி இன்று இந்தியா முழுவதும் எதிரொலிக்கிறது!

உரிமைக் குரல் எழுப்பிய அவைத்தலைவர் அவர்களுக்கும், உரிமைப் பாதையில் தமிழ்நாட்டை வழிநடத்தும் மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்களுக்கும், தமிழ்நாடு மட்டுமின்றி, இந்தியாவே கடமைப்பட்டுள்ளது!

●

# மீனவர் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும்

மா.உதயகுமார்

நவம்பர் 21, உலக மீனவர்கள் தினத்தை ஒட்டி, தலைநகர் டெல்லியில், மாநாடு ஒன்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. முன்னதாக இந்நிகழ்ச்சியில் ஒன்றிய மீன்வளத்துறை அமைச்சர் பர்சோத்தம் ரூபாலா கலந்து கொள்ள இருப்பதாகவும், அப்போது ஒன்றியஅரசின் புதிய மீன்வள மசோதா *(The Marine Fisheries bill 2021)* தொடர்பாக மீனவச் சங்கங்கள் ஆலோசிக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டு இருந்தது.

ஆனால் திட்டமிட்டபடி ஒன்றிய மீன்வளத்துறை அமைச்சர் கூட்டத்தில் பங்கேற்கவில்லை. மேலும் கூட்டத்தில் ஒன்றியஅமைச்சர் கலந்து கொள்ள ஏற்பாடுகளைச் செய்த ஒடிசா மாநிலத்தைச் சேர்ந்த ஆனந்த் சாகு என்பவர் ஒன்றிய அரசின் மீனவ மசோதாக்களை ஆதரிப்பது போலவும், பர்சோத்தம் ரூபாலா மீனவர்களுக்குப் பாடுபடுவது போலவும் பேசினார். இதனால் ஆத்திரமடைந்தத் தமிழக மீனவர்கள் எதிர்ப்புத் தெரிவித்து வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். அதனால் சிறுது நேரம் சலசலப்பு ஏற்பட்டது. இந்நிகழ்ச்சியில் தமிழக எம்.பி தம்பிதுரை பங்கேற்ற நிலையில், அவர் முன்னர், 15 நிமிடங்களுக்கும் மேலாக வாக்குவாதம் ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது.

இந்திய அரசின் புதிய கடல்சார் மீன்வளச் சட்ட மசோதாவுக்கு மீனவர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துவருகிறார்கள்.

இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டால், மீனவர்களின் வாழ்வாதாரம் முற்றாக அழிக்கப்படும் எனக் கூறி நாடு முழுவதும் உள்ள மீனவர்கள் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர்.

இந்தச் சட்டத்தின் மூலம் மீன்பிடித் தடைக்காலம், மீன் பிடிப்பதற்கான நேரம் உள்பட அனைத்தும் அரசின் கட்டுப்பாட்டிலேயே இருக்கும். மேலும், இந்தச் சட்டத்தில் யார் மீனவர்கள் என்பதும் வரையறை செய்யப்படவில்லை.

ஆகஸ்ட் மாதத்தில், இந்தச் சட்டத்தில் உள்ள குறைகளையும், பாதகங்களையும் இந்திய அரசின் மீன்வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத்துறை அமைச்சர் பர்சோத்தம் ரூபாலாவை டில்லியில் சென்று சந்தித்து, தமிழ்நாட்டு மீனவர்கள் மனு அளித்தனர். அவரும் திருத்தம் செய்வதாக உறுதியளித்துள்ளார். இராமநாதபுரம் எம்.பி நவாஸ்கனி, பாரம்பரிய மீனவர்கள் கூட்டமைப்பின் முதன்மை ஒருங்கிணைப்பாளர் சே.சின்னத்தம்பி, ஒருங்கிணைப்பாளர் கனிஷ்டன், தமிழ்நாடு மீன்பிடி தொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்த அன்பு, ராயப்பன், செழியன் உள்ளிட்டோர் ஒன்றிய அமைச்சரைச் சந்தித்தனர்.



இந்த நிலையில் இப்போது நவம்பர் மாதம் உலக மீனவர்கள் தினத்தையொட்டி மீனவர் சங்கங்களை வரச் சொல்லி, பா.ஜ.க ஆதரவாளர்களை மீனவர் பிரதிநிதிகளாக முன்னிறுத்தி, இந்த மசோதாக்களுக்கு மீனவர்கள் ஆதரவு தருவது போன்ற சித்திரத்தை வரைய முற்படுவது அப்பட்டமாகத் தெரிகிறது.

இந்தியக் கடல்சார் மீன்வளச் சட்டத்தில் செய்யப்பட வேண்டிய மாற்றங்கள் குறித்து மீனவர்கள் சங்கங்கள் முன்வைக்கும் கருத்துகள் பின்வருமாறு:

இன்ஜின் பொருத்தப்படாத படகுகளுக்கு கட்டணம் செலுத்துவதில் இருந்து விதிவிலக்கு. இன்ஜின் பொருத்தப்படாத படகுகள் எல்லாம் வழக்கொழிந்து போய்விட்டன. அதன் எண்ணிக்கைகள் மிக மிகக் குறைவு. பாரம்பரிய மீனவர்களை எல்லாம் விசைப்படகுக்குப் பழக்கி 30 வருடங்களுக்கு மேலாகிவிட்டது. எனவே, படகின் நீளம், இன்ஜினின் குதிரைத் திறன் ஆகியவற்றைப் பொறுத்து விதிவிலக்கு கொடுத்தால் சரியாக இருக்கும்.

“ மீனவர்களின் கோரிக்கைகளுக்குச் செவிமடுக்காமல், மாநில அரசைக் கை காட்டுவது, ஒன்றிய அரசு மக்கள் நலனில் எந்த அக்கறையும் இல்லாமல் இருப்பதைக் காட்டுகிறது. மீனவர்கள் உரிமைகளைப் பறிக்கும் சட்டத்தை ஒன்றிய அரசு இயற்றுமாம், ஆனால் அவர்கள் உரிமைகளைப் பாதுகாக்க மாநில அரசுகள் விலக்குகள் பெற வேண்டுமாம். ”

கடல் மீன்வளச் சட்டத்தில் மீனவர்களுக்கான உரிமையும் பாதுகாப்பும் இருக்க வேண்டும். இதற்கான கமிட்டியில் மீனவர்களுக்கும் பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டும்.

பாரம்பரிய மீனவர்களுக்கான உரிமைப் பாதுகாப்பு என்பது சட்டமாக இயற்றப்பட வேண்டும். மற்ற பழங்குடி மக்களுக்கு என உரிமைகள் உள்ளன. கடல் பழங்குடிகளுக்கும் பாதுகாப்பு வேண்டும்.

மீனவர்களின் இந்தக் கோரிக்கைகளுக்குச் செவிமடுக்காமல், மாநில அரசைக் கை காட்டுவது, ஒன்றிய அரசு மக்கள் நலனில் எந்த அக்கறையும் இல்லாமல் இருப்பதைக் காட்டுகிறது. மீனவர்கள் உரிமைகளைப் பறிக்கும் சட்டத்தை ஒன்றிய அரசு இயற்றுமாம், ஆனால் அவர்கள் உரிமைகளைப் பாதுகாக்க மாநில அரசுகள் விலக்குகள் பெற வேண்டுமாம்.

ஒன்றிய அரசின் சட்டங்களுக்கு மாநிலங்கள் விலக்குப் பெறுவதும், பிறகு அது சட்டப்படி செல்லுபடியாகுமா என்றக் குழப்பத்தை ஏற்படுத்தி, ஏழை விவசாயிகளையும், மீனவர்களையும் இன்னும் அத்தனை நலிந்த தொழிலாளர்களையும் வாட்டி வதைப்பதே ஒன்றிய அரசின் வாடிக்கையாகிவிட்டது.

இப்போது விவசாயிகள், ஒன்றிய அரசுக்குப் பாடம் புகட்டியிருக்கிறார்கள். வேளாண் சட்டங்களைத் திரும்பப் பெற்றுக்கொள்வதாக ஒன்றிய அரசு அறிவித்திருக்கிறது. அதே போல் மீனவர் சங்கங்கள் முன்வைக்கும் திருத்தங்களை, இந்தியக் கடல் மீன் வள மசோதாவில்(2021) ஒன்றிய அரசு செய்திட வேண்டும். ●

தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்

## வெள்ளப் பாதிப்பும், உரிமையும்

"கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய் மற்றாங்கே எடுப்பதூஉம் எல்லாம் மழை"

- என்கிறார் பெரும்புலவர் திருவள்ளுவர்.

ஆந்திரம், கர்நாடகம் நீர்பிடிப்புப் பகுதிகளில் கொட்டிய கனமழையால் காவிரி ஆறிலும், தொண்ணூற்றி ஒன்பது ஆண்டுகளுக்குப் பிறகு பாலாறிலும், தமிழகத்தின் எல்லா ஆறுகளிலும் வெள்ளம் கரைகளைத் தாண்டிப் பெருக்கெடுக்கத் தொடங்கியது.

தமிழகத்தில் ஒருபுறம் அளவுக்கு அதிகமான கனமழையும், மறுபுறம் அணைகளின் கொள்ளளவைத் தாண்டியதால் திறந்துவிடப்பட்ட உபரி நீரும், வீடுகளுக்குள்ளும், வேளாண் நிலங்களிலும் புகுந்து பெரும் அழிவுகளை ஏற்படுத்திவிட்டது.

ஊர்களைச் சூழ்ந்து தெருவெல்லாம் வெள்ளம் ஏற்பட்டு, வீடுகளுக்குள் நீர் புகுந்தும், பல வீடுகள் இடிந்தும், பல குடிசைகள் வெள்ளத்தோடும் போயின.

விளைந்த பயிர் நிலங்களில், நீர் தேங்கி நின்றதால் வேளாண் மக்கள் மிகப் பெரும் இழப்பைச் சந்தித்துள்ளார்கள்.

இந்த இழப்புகளைச் சரி செய்வதற்காக ஒன்றிய அமைச்சர் அமித்ஷாவை தி.மு. கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு சந்தித்துப் பேசியுள்ளார். தமிழக அரசின் சார்பாக வெள்ள நிவாரண நிதியாக ரூபாய் 2,079கோடி வேண்டும் என்றும், முதல் கட்டமாக ரூபாய் 550 கோடியை விடுவிக்கவும் வேண்டுகோள் வைத்தார்.

இந்நிலையில் ஒன்றிய அரசின் உள்துறை இணைச் செயலர் ராஜீவ் சர்மா தலைமையில் ஒரு குழு தமிழகம் வந்து பார்வையிட்டுச் சென்று அறிக்கை அளிக்க உள்ளது.

இவை எல்லாம் ஒரு நடைமுறைதான். என்ன நடைமுறை இருந்தாலும், கடந்த ஆண்டுகளில் தமிழ்நாடு அரசு கேட்ட வெள்ளப் பேரிடர் நிவாரண நிதியை முழுதுமாக இதுவரை ஒன்றிய அரசு கொடுத்ததில்லை. கேட்கும் நிவாரணத் தொகையில் பாதியளவுக்கும் குறைவாகவே கொடுத்து வந்துள்ளது.

எடுத்துக் காட்டாக 2018 கஜா புயல் பாதிப்பிற்குத் தமிழகம் கேட்ட நிவாரணத் தொகை ரூபாய் 14,910 கோடி. ஆனால் ஒன்றிய அரசு கொடுத்ததோ வெறும் 1,500 கோடிதான். இப்படிச் செய்வதால் மக்களின் துயரை, நான்கில் ஒரு பங்கு கூட தீர்க்க முடியாது.

பா.ஜ.கவைப் புறக்கணிக்கிறார்கள் தமிழக மக்கள் என்பதற்காக , மக்களின் துயர் துடைக்க இப்பொழுது ஏற்பட்டுள்ள வெள்ளப் பேரிடருக்காகத் தமிழ்நாடு அரசு கேட்கும் நிவாரணத் தொகையை முழுமையாகக் கொடுக்க வேண்டும் என்பதை ஒன்றிய அரசு உணர வேண்டும், கொடுக்க வேண்டும்.

கேட்பது தமிழக அரசின் உரிமை. கொடுப்பது ஒன்றிய அரசின் கடமை.







ஆசிரியர்: **சுப.வீரபாண்டியன்**

பொறுப்பாசிரியர்: **எழில். இளங்கோவன்**

உதவி ஆசிரியர்கள்:
**உதயகுமார், வெற்றிச்செல்வன், சாரதாதேவி**

**வெளியீடு:**
**திராவிட இயக்கத் தமிழர் பேரவை**

இணையதளம்
**www.keetru.com, www.karunchattaibooks.com**

மின் அஞ்சல்: **karunchattai@gmail.com**

டுவிட்டர்: **suba_vee**

தொடர்புக்கு
**120 என்.டி. ராமராவ் தெரு, ரங்கராஜபுரம், கோடம்பாக்கம், சென்னை - 600 024,தொலைபேசி: 044-2472 6408**

# கூட்டாட்சிக் கட்டமைப்பைச் சீர்குலைக்கும் பா.ஜ.க

**சாரததாதேவி**

இந்திய ஒன்றியத்தில் பல்வேறு தேசிய இனங்கள் உள்ளடங்கியுள்ளன. மொழிவழி மாநிலங்களாக அவை பிரிக்கப்பட்டுள்ளன. இது ஒரு பெரும் பிரிவு மட்டுமே. இன்னும் சில மாநிலங்கள் ஒன்றுக்கு மேற்பட்ட தேசிய இனங்களை உள்ளடக்கி உள்ளன. அவை பல்வேறு மொழிகளைப் பேசுகின்றன. அதோடு பல்வேறு பொருளாதார, அரசியல், பண்பாட்டுக் கூறுகளை உள்ளடக்கி உள்ளன. பெரும்பான்மை மொழி வழி மாநிலங்கள் தங்களுக்கே உரிய பொருளாதார, அரசியல், பண்பாட்டுக் கூறுகள், இவற்றோடு இயற்கை மற்றும் மனித வளங்களை மேம்படுத்திக் கொள்ள, இராணுவக் கட்டமைப்பால் பாதுகாக்கப்படும், வளங்களைப் பகிர்ந்து கொள்ளும் ஒரு புவிசார் ஒன்றியக் கூட்டாட்சியை ஏற்றுக் கொண்டன.

இந்தியாவின் ஒருமைப்பாடு என்பதே அதன் பன்மைத்துவத்தைப் பாதுகாத்து அங்கீகரிப்பதுதான். அதை மறந்து தேசிய ஒருமைப்பாட்டை ஒருமைத்துவத்தால் கட்ட முடியும் எனும் கற்பனையான நம்பிக்கையை ஆளும் ஒன்றிய அரசுகள் வளர்த்ததன் விளைவாக மாநில அரசுகளின் அதிகார எல்லைகளைச் சுருக்க விழைகின்றனர். கூட்டாட்சியை வளர்ச்சிக்கு எதிரானதாக அவர்கள் சித்தரிக்க முனைகின்றனர்.

குஜராத் மாநில முதலமைச்சராக இருந்தபோது தன் மாநில உரிமைக்காக காங்கிரசு அரசிடம் மல்லுக் கட்டிய நரேந்திர மோடி, ஒரு வலுவான பெரும்பான்மை அரசை ஒன்றியத்தில் கைப்பற்றிய பின் மாநில உரிமைகளைப் பறிக்கும் வேலையில் இறங்கி உள்ளார். அல்லது அவரை இயக்கும் இந்துத்துவ சித்தாந்த அரசியலும் அதற்குத் துணை போகும் பார்ப்பனிய அதிகார வர்க்கமும் மாநில அரசுகளைப் பலவீனப்படுத்தும் முயற்சிகளை அவர் வழி வேகப்படுத்துகின்றன.



திட்ட ஆணையம், நிதி அயோக் என்று பெயர் சூட்டப்பட்டது. அது மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படும் வருவாயை 32%இல் இருந்து 42% ஆக உயர்த்தினாலும் நடைமுறையில் வருவாய்ப் பகிர்வு 30%-35%ஐ கடக்கவில்லை. பல ஆயிரம் கோடிகள் வருவாய்ப் பாக்கித் தொகைக்காக மாநிலங்கள் போராடும் சூழலே நிலவுகிறது.

அதிகார எல்லைகளிலும் மாநிலங்களைக் கைப்பாவை ஆக்கித் தங்கள் அரசியல் வளர்ச்சிக்கும் அதிகாரக் கட்டமைப்பிற்கும் பயன்படுத்த பா.ஜ.க திட்டமிடுகிறது. கலைஞர் ஆட்சி செய்த 2011 வரை, ஆளுநர் நியமனம் மாநில அரசின் கலந்துரையாடலோடுதான் நடந்துள்ளது. அதன் பின்னர் 2014 முதல் நடைபெற்ற நியமனங்கள் எதேச்சதிகாரமாக நடைபெறத் தொடங்கி உள்ளன. புதுச்சேரியில் ஆளுநராக நியமிக்கப்பட்ட கிரண்பேடி மாநில நிர்வாகத்தில் நித்தம் நித்தம் தலையீடு செய்ததும், இணை அரசாங்கமே நடத்தியதும் அதைத் தொடர்ந்து புதுச்சேரி முதல்வர் நாராயணசாமி பதவி இழந்ததும் நாம் அறிவோம். மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் அரசைக் கொச்சைப் படுத்தும் முயற்சி இது.

தமிழ்நாட்டில் புதிதாகப் பதவியேற்ற தி.மு.க அரசின் செயல்பாடுகளைப் பார்த்து விரலசைக்கக் கூட முடியாமல் இருந்த பன்வாரிலால் புரோகித்தை இடம் மாற்றி, புதிய ஆளுநரை நியமித்தது ஒன்றிய அரசு. அவரும் வந்த ஜோரில் சில அதிகாரத் தலையீடுகளைச் செய்து பார்த்தார். பின்னர் ஆளும் தி.மு.க அமைச்சரவையின் தன்மை உணர்ந்து வாலைச் சுருட்டிக் கொண்டார். ஒரு நல்ல ஆட்சியில் ஆளுநர் பதவி என்பது அலங்காரப் பதவி மட்டுமே என்பதைச் சொல்லாமல் சொன்னது ஆளும் தி.மு.க அரசு.

கடந்த மாதத்தில், பதவியேற்ற சில நாட்களிலேயே மேகாலயா உயர்நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டார் தலைமை நீதிபதி சஞ்சீப் பானர்ஜி. அவருடைய மாற்றலுக்கு எதிராக எழுந்த கண்டனக் குரல்களும், அவருடைய பிரிவு நாள் பேச்சும் அவர் தமிழ் மக்களை நேசிக்கத் தொடங்கி இருந்ததையும், அதனால் அவருக்கு இழைக்கப்பட்ட அநீதியையும் சேர்த்தே சொல்கின்றன. நீதிமன்றங்களும் தங்கள் கைப்பாவையாக இருக்கவே இந்த மாற்றல் ஆயுதங்களைக் கைக் கொள்கிறது ஒன்றிய அரசு.

புதிய கல்வித் திட்டம், உதய் மின் திட்டம், ஸ்வச் பாரத் எனும் தூய்மைப் பணி, உஜ்வாலா எரிவாயுத் திட்டம், ஆயுஷ்மான் பாரத் காப்பீட்டுத் திட்டம் ஆகியத் திட்டங்களை நேரடியாக ஒன்றிய அரசு அறிவிப்பதும், அதற்காக உடனடியாக நிதி ஒதுக்கீடுகள் செய்யப்படுவதும், அதை பா.ஜ.கவின் அடிபொடிகள் சிரமேற்கொண்டு மக்களிடையே பரப்புவதும் மாநில சுயாட்சியின் கட்டமைப்பைச் சிதைத்து நேரிடையாக ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டின் கீழ் அத் துறைகளைக் கொண்டு வரும் முயற்சிகளே!

மாநில மற்றும் கூட்டுப் பொறுப்பில் இருக்கும் விவசாயக் கொள்கை முடிவுகளை மாநிலங்களைக் கலக்காமல், விவாதத்துக்குக் கூட உட்படுத்தாமல் அவசர அவசரமாகத் திணித்தது; 10% இட ஒதுக்கீட்டைப் பின்பற்றச் சொல்லி மாநிலங்களுக்குப் புற வழியாக அழுத்தம் கொடுப்பது; அதிகாரக் கட்டமைப்பின் வழி நேர்மையற்றுப் புகுத்த முனைவது; புதிய கல்விக் கொள்கை, நீட் தேர்வு, ஒரே ரேஷன் கார்டு திட்டம் ஆகியவை, போராடிய விவசாயிகளின் மீது ஏறிய டிராக்டரைப் போன்று வன்மையானவை; அச்சுறுத்துபவை; மாநில அரசின் அதிகார மூச்சை நிறுத்திவிடும் துணிபு கொண்டவை.

முதலமைச்சர்களின் கூட்டம் என்றால் அதில் ஸ்டாலின் கண்டிப்பாக மாநில சுயாட்சி குறித்த கேள்விகளை எழுப்புவார் என ஊடகங்கள் எழுதித் தீர்க்கின்றன. அவைத் தலைவர்களின் மாநாட்டில் பங்கு பெற்ற தமிழ்நாடு பேரவைத் தலைவர் அப்பாவு அவர்கள் ஆளுநரின் ஒப்புதலுக்குக் கால நிர்ணயமும், ஜனாதிபதியின் திருப்பி அனுப்பலுக்குக் காரணமும் கட்டாயமாக்கப் பட வேண்டும் என்றக் கோரிக்கையை வைக்கிறார்.

இது தமிழ்நாடு. விடுதலைக் குரலை சுயாட்சியின் குரலாக நாட்டின் ஒற்றுமை கருதி குறைத்துக் கொண்ட, தியாகத் தீரர்கள் பக்குவப் படுத்திய மண். நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் இரண்டாவது பெரிய மாநிலமாக தங்கள் உழைப்பையும் வரியையும் இன்னும் இயற்கை வளங்களையும் நாட்டின் வளர்ச்சிக்குக் கொட்டியும் விட்டும் கொடுக்கும் மாநிலம். சுயாட்சியின் குரல்வளையும் நெரிக்கப் படுவதை ஒரு போதும் நாம் பார்த்துக் கொண்டிருக்க இயலாது. 1969ல் பி.வி.ராஜமன்னார் குழு அமைத்து, 1974ல் மாநில சுயாட்சிக்கான வெள்ளை அறிக்கையைத் தாக்கல் செய்த ஆட்சி இது.

மீண்டும் ஒரு அடிமைத் தனத்தைப் புகுத்தி இந்த நாட்டை ஒற்றைத் துருவ அரசியல் பண்பாட்டுத் தேசமாக்க முனையும் பாரதிய ஜனதாவின் அரசியல், தமிழ்நாட்டின் சீரிய தலைமையின் கீழ் தவிடுபொடியாக்கப்படும். •

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian